# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, சென்னை –600 032.
தொலைபேசி: 044–22201337/நிகரி எண்.22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 0509/2016/பேரூராட்சி

ஆணை எண்: 25/2017

நாள்: 13 /03/2017

ஊர் பொதுமக்கள்,
புதுக்கடை பேரூராட்சி,
புதுக்கடை, கன்னியாகுமரி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

பேரூராட்சி முன்னாள்தலைவர்,
செயல் அலுவலர் மற்றும் பணியாளர்,
புதுக்கடை பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம். – எதிர் மனுதாரர்கள்

கன்னியாகுமரி மாவட்டம், புதுக்கடை பேரூராட்சி ஊர் பொதுமக்களின் நாளிடப்படாத முறையீட்டு மனு, பேரூராட்சிகளின் இயக்குநர் கடிதம் ந.க.எண்.6068/2014/இ2, நாள்:26.05.2016 வாயிலாக இம்முறைமன்ற நடுவத்தின் மூலம் உரிய விசாரணை மற்றும் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு அனுப்பப்பட்டு, 06.06.2016 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 0509/2016 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மேற்படி முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது:-

## ஆணை:-

புதுக்கடை பேரூராட்சி ஊர் பொதுமக்களின் மேற்படி முறையீட்டு மனுவில், புதுக்கடை பேரூராட்சியில் உள்ள "பெரும்பயன் குளம்" 30 வருடங்களாக சரிவர பராமரிப்பு இல்லாமல் கரை இடிந்த நிலையில் இருந்ததால், பொது மக்களின் பல்வேறு கோரிக்கைகளின் அடிப்படையில் அக்குளத்தினை சீர் செய்யும் பொருட்டு ரூ.36 இலட்சம் சிறப்பு நிதியாகவும், பேரூராட்சி பொது

நிதியாக ரூ.8 இலட்சமும் சேர்த்து மொத்தம் ரூ.44 இலட்சம் மதிப்பீட்டில் பக்கச்சுவர் மற்றும் குளிக்கடவு ஆகியவை கட்டி முடிக்கப்பட்டதாகவும் ஆனால் தரமில்லாத கலவையில், காங்கிரீட் போடாமல், பக்கச் சுவர் கட்டி முடிக்கப்பட்டதால் 3 மாதம் ஆகும் நிலையில், பாதி குளம் நிரம்பிய நிலையில், குளத்தின் வடக்கு பகுதி இடிந்து தண்ணீர் வெளியேறி அறுவடை செய்வதற்கு தயார் நிலையில் இருந்த நெற்பயிர்கள் முழுவதும் மூழ்கியதாகவும், மேற்படி குளத்தினை சீரமைக்க செலவிடப்பட்ட தொகையில் பல லட்ச ரூபாய் ஊழல் நடந்துள்ளதாகவும், இதற்கு பேரூராட்சி தலைவர் முதல் பேரூராட்சி ஊழியர்கள் அனைவரும் உடந்தையாக இருந்துள்ளதாகவும், எனவே, உடைந்த நிலையில் உள்ள குளத்தினை சீரமைக்கவும், மேலே குறிப்பிட்ட முறைகேட்டில் ஈடுபட்ட அனைவர் மீதும் நடவடிக்கை எடுக்கவும் கோரப்பட்டுள்ளது.

2) மேற்படி முறையீட்டு மனு சம்பந்தமாக 10.06.2016 நாளிட்ட முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண்.0509/TPT/2016-ன் வாயிலாக செயல் அலுவலரின் விளக்க அறிக்கையும், 18.07.2016 நாளிட்ட முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண்.0509/பேரூ/2016-ன் வாயிலாக பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் தல ஆய்வு அறிக்கையும் கோரப்பட்டது. அதன்படி 01.07.2016 நாளிட்ட பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை ROC எண்.147/16/A/01.07.2016 மற்றும் 21.10.2016 நாளிட்ட பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் தல ஆய்வு அறிக்கை எண்.4333/2016/ப.1 இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டது. அவ்வறிக்கையில், முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ள, 'பெரும்பயன் குளத்தின் இடிந்த கட்டுமானப் பகுதி' பொதுப்பணித் துறையினரால் பல ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்ட கருங்கல் கட்டுமானம் என்றும், பேரூராட்சி பகுதிக்கு உட்பட்ட பகுதியில் அமைந்துள்ள மேற்படி குளத்தின் பழைய கட்டுமானம், பேரூராட்சிக்கு சொந்தமில்லாத போதும் பொதுமக்களுக்காக தற்காலிகமாக சரி செய்யப்பட்டதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு புகைப்பட நகலினை ஆதாரமாக இணைத்துள்ளனர்.

3) மேலும், பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் ஆய்வறிக்கையில், கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

"தல ஆய்வின் போது மேற்படி குளம் திட்டநிதி/பொதுநிதி ஆகியவற்றின் மூலம் புனரமைக்கப்பட்ட குளம் என்பது உறுதி செய்யப்பட்டது. புகார் மனுவில் 12.11.2012 அன்று பெய்த மழையில் கட்டிமுடிக்கப்பட்டு மூன்று மாதங்களேயான நிலையில் குளத்தின் வடக்குப்பகுதி இடிந்து உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இக்குளத்தின் பணி திட்ட நிதியில் 11.07.2013 அன்றும் பொதுநிதியில் 03.10.2013 அன்றும் இறுதியாக மேலளவு (last check measurement) செய்யப்பட்டுள்ளதாக அளவுச்சுவடிகளில் பதிவாகியுள்ளது. அதாவது புகார் மனுவில் குளம் சேதமடைந்ததாக குறிப்பிடப்பட்ட தேதிக்கு பல மாதங்களுக்கு பின்னரே பணி நிறைவு பெற்றுள்ளது.

அவ்வாறாயின் இப்புகார் மனு உண்மைக்கு புறம்பானது என்பது புலனாகிறது. மேலும் இப்பணி உயர் தொழில்நுட்ப அலுவலரான செயற்பொறியாளர் தொழில்நுட்ப அனுமதியில் (Technical Sanction) மேற்கொள்ளப்பட்டு மேலளவு செய்யப்பட்ட (Check measurement) பணி என்பதால் இதன் தரம் உறுதி செய்யப்படுகிறது.

இக்குளத்தின் அருகில் உள்ள கீழ்கண்ட மூன்று நபர்களை விசாரித்ததில் குளத்தின் கரை இயற்கை சீற்றத்தினால் சேதமுற்றது உண்மைதான் என்றாலும் சேதமுற்ற பகுதி பழைய கட்டுமானம் எனவும் மேற்படி சேதமுற்ற பகுதியும் பேரூராட்சியின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பணியில் சரிசெய்யப்பட்டுள்ளது எனவும் தல ஆய்வில் உறுதி செய்யப்பட்டது.

விசாரணை செய்யப்பட்ட நபர்கள்

1. திருமதி. சுந்தரி, க/பெ. (லேட்) பிராபகாரன், வயது 63
   வட்டபள்ளி விளை, புதுக்கடை அஞ்சல்.
2. திரு. ஜோயல் சிங், த/பெ. ஜாண் கருணாகரன், வயது 39
   நாட்டுக்கல்லி, மேலங்கலம், புதுக்கடை அஞ்சல்,
3. திருமதி. மரியபுஷ்பம், க/பெ. விஜயகுமார், வயது 36
   பனையறவிளை, புதுக்கடை அஞ்சல்.

மேலும் இப்பணி மேற்கொண்டு சுமார் மூன்று ஆண்டுகள் நிறைவுற்றுள்ளதால் இயற்கை மற்றும் காலப்போக்கினால் ஏற்பட்ட தேய்மானங்கள் (depreciation due to the natural wear and tear) மட்டுமே உள்ளன. மற்றபடி கட்டுமானம் நல்லமுறையில் உள்ளது என்றும் இது அடிப்படை ஆதாரமில்லாத புகார் என்ற விபரமும் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது." என்று குறிப்பிட்டுள்ளார்.

4) இந்நேர்வில் மேற்படி முறையீடு குறித்து பெறப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலர் அறிக்கை மற்றும் பேரூராட்சி உதவி இயக்குநர் தல ஆய்வு அறிக்கை ஆகியவை பரிசீலிக்கப்பட்டன. மேற்படி அறிக்கைகளின்படி, தெரிவிக்கப்பட்ட குளத்தின் கரையினை சீரமைக்கும் பணியானது உயர் தொழில்நுட்ப அலுவலரான செயற் பொறியாளர் தொழில்நுட்ப அனுமதியில் மேற்கொள்ளப்பட்டு, மேலளவு செய்யப்பட்டு அதன் தரம் உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்படி முறையீட்டு மனுவில் பெறப்பட்ட செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அறிக்கையினை ஏற்று, மேற்படி முறையீட்டு மனுவின் மீது மேல் நடவடிக்கையினை கைவிடலாம் என கருதி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 13-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிடப்பட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//---

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்:

செயல் அலுவலர்,
புதுக்கடை பேரூராட்சி,
புதுக்கடை,
கன்னியாகுமரி மாவட்டம் - 629 171.